DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 130 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 2

Name : திருமதி.மாரியம்மாள்

Age : 51

Father's/Husband's Name : வீராச்சாமி

Village : செரங்காடு

Taluk : திருப்பூர்

Occupation : இல்லத்தரசி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February 2021

முதல் விசாரணை: நாள்.10.02.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு வருகிறேன். கடந்த 18.12.2017 அன்று காலை 10 மணிக்கு என் மகன் வேலைக்கு சென்றான். என் மகனுடன் யார் உடன் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. சுமார் 12.30 மணியளவில் என் மகனின் நண்பர் ராமர் எங்களுக்கு போன் செய்து என்னுடைய மகன் சென்ற ஆம்னி வேன் பல்லடம் லட்சுமி மில் அருகில் ஜி டி என் கம்பெனி அருகில் விபத்து ஏற்பட்டது என்றும், என் மகன் மருத்துவமனையில் இருப்பதாகவும் தகவல் சொல்லி என்னை அழைத்து வந்தார். நாங்கள் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது என் மகன் சவக்கிடங்கில் இறந்த நிலையில் இருந்தான். என் மகனுடன் மொத்தம் 4 நபர்கள் இறந்துவிட்டதாக தெரிவித்தார். இதுகுறித்து என் கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு கு.வி.

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC. 130 of 2018

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 1

Name : திரு. வீராச்சாமி

Age : 58

Father's/Husband's Name : ஊர்காலன்

Village : செரங்காடு

Taluk : திருப்பூர்

Occupation : கம்பெனி வேலை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February 2021

முதல் விசாரணை: நாள்.10.02.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துகொண்டு பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.12.2017 அன்று சுமார் 12.30 மணியளவில் என் மகனின் நண்பர் ராமர் எனக்கு போன் செய்து என்னுடைய மகன் சென்ற TN 39 CD 7822 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி வேன் பல்லடம் லட்சுமி மில் அருகில் ஜி டி என் கம்பெனி அருகில் விபத்து ஏற்பட்டது என்றும், என் மகன் மருத்துவமனையில் இருப்பதாகவும் தகவல் சொல்லி என்னை அழைத்து வந்தார். நாங்கள் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது என் மகன் சவக்கிடங்கில் இறந்த நிலையில் இருந்தான். டி எஸ் பி முத்துச்சாமி என்னை விசாரித்தார். என் மகனுடன் 3 நபர்கள் இறந்துவிட்டதாக தெரிவித்தார். அதில் முகமது மொய்தீன் மற்றும் ஓட்டுநர் முகமது உசேன் என்பவருக்கு காயம் ஏற்பட்டு திருப்பூர் ரேவதி மருத்துவமனையில்

சேர்த்திருப்பதாக சொன்னார். பின்னிட்டு காவல்நிலையம் சென்று தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரினை நான் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1., பின்னிட்டு என் மகன் உடலை சடலக்கூராய்வு பின்னிட்டு என் மகனின் உடலை பெற்றுச்சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு கு.வி.

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் மகனின் நண்பர் ராமர் எனக்கு விபத்து குறித்து தகவல் சொன்னதாக என்னுடைய புகாரில் நான் சொல்லவில்லை. நான் விபத்து குறித்து தகவல் கேள்விபட்டு இரவு 12.45 மணிக்கு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். புகாரினை நான்தான் எழுதி கையொப்பம் செய்தேன். புகாரில் சம்பவம் குறித்து அங்கிருந்தவர்களை விசாரணை செய்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன், அது யார், என்ன விவரம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு நேரடியாக விபத்து குறித்து எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து போலீசார் என்னிடம் சொன்னார்கள், அதை நான் புகாரில் எழுதினேன். நான் சொன்ன தேதி, சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், இழப்பீடு பெறுவதற்காக எதிரிமீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்